ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கையிலங்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கையிலங்கு ॥

திருப்பேர் நகர்

‡கை இலங்காழி சங்கன்⋆ கரு முகில் திரு நிறத்தன்⋆
பொயிலன் மெய்யன்⋆ தன் தாள் அடைவரேல் அடிமை ஆக்கும்⋆
செய் அலர் கமலம் ஓங்கு⋆ செறி பொழில் தென் திருப்பேர்⋆
பை அரவணையான் நாமம்⋆ பரவி நான் உய்ந்தவாறே (1)

வங்கமார் கடல்கள் ஏழும்⋆ மலையும் வானகமும் மற்றும்⋆
அங்கண் மா ஞாலம் எல்லாம்⋆ அமுது செய்துமிழ்ந்த எந்தை⋆
திங்கள் மா முகில் அணவு⋆ செறி பொழில் தென் திருப்பேர்⋆
எங்கள் மால் இறைவன் நாமம்⋆ ஏத்தி நான் உய்ந்தவாறே (2)

ஒருவனையுந்திப் பூமேல்⋆ ஓங்குவித்தாகம் தன்னால்⋆
ஒருவனைச் சாபம் நீக்கி⋆ உம்பராள் என்று விட்டான்⋆
பெரு வரை மதிள்கள் சூழ்ந்த⋆ பெரு நகர் அரவணை மேல்⋆
கரு வரை வண்ணன் தென் பேர்⋆ கருதி நான் உய்ந்தவாறே (3)

ஊன் அமர் தலை ஒன்றேந்தி⋆ உலகெலாம் திரியும் ஈசன்⋆
ஈன் அமர் சாபம் நீக்காய் என்ன⋆ ஒண் புனலை ஈந்தான்⋆
தேன் அமர் பொழில்கள் சூழ்ந்த⋆ செறி வயல் தென் திருப்பேர்⋆
வானவர் தலைவன் நாமம்⋆ வாழ்த்தி நான் உய்ந்தவாறே (4)

வக்கரன் வாய் முன் கீண்ட⋆ மாயநே! என்று வானோர்
புக்கு⋆ அரண் தந்துஅருளாய் என்ன⋆ பொன் ஆகத்தானை⋆
நக்கரி உருவம் ஆகி⋆ நகம் கிளர்ந்திடந்துகந்த⋆
சக்கரச்செல்வன் தென் பேர்த்⋆ தலைவந்தாள் அடைந்துய்ந்தேனே (5)

விலங்கலால் கடல் அடைத்து⋆ விளங்கிழை பொருட்டு⋆ வில்லால்
இலங்கை மா நகர்க்கிறைவன்⋆ இருபது புயம் துணித்தான்⋆
நலங்கொள் நான்மறை வல்லார்கள்⋆ ஓத்தொலி ஏத்தக் கேட்டு⋆
மலங்கு பாய் வயல் திருப்பேர்⋆ மருவி நான் வாழ்ந்தவாறே (6)

www.prapatti.com

வெண்ணெய் தான் அமுது செய்ய⋆ வெகுண்டு மத்தாய்ச்சி ஓச்சி⋆
கண்ணியார் குறுங்கயிற்றால்⋆ கட்ட வெட்டென்றிருந்தான்⋆
திண்ண மா மதிள்கள் சூழ்ந்த⋆ தென் திருப்பேருள்⋆ வேலை
வண்ணனார் நாமம்⋆ நாளும் வாய் மொழிந்துய்ந்தவாறே (7)

அம் பொனார் உலகம் ஏழும் அறிய⋆ ஆய்ப்பாடி தன்னுள்⋆
கொம்பனார் பின்னை கோலம்⋆ கூடுதற்கேறு கொன்றான்⋆
செம் பொனார் மதிள்கள் சூழ்ந்த⋆ தென் திருப்பேருள் மேவும்⋆
எம் பிரான் நாமம்⋆ நாளும் ஏத்தி நான் உய்ந்தவாறே (8)

நால் வகை வேதம் ஐந்து வேள்வி⋆ ஆறங்கம் வல்லார்⋆
மேலை வானவரில் மிக்க⋆ வேதியர் ஆதி காலம்⋆
சேல் உகள் வயல் திருப்பேர்ச்⋆ செங்கண் மாலோடும் வாழ்வார்⋆
சீல மா தவத்தர் சிந்தை ஆளி⋆ என் சிந்தையானே (9)

‡வண்டறை பொழில் திருப்பேர்⋆ வரி அரவணையில்⋆ பள்ளி
கொண்டுறைகின்ற மாலைக்⋆ கொடி மதிள் மாட மங்கை⋆
திண் திறல் தோள் கலியன்⋆ செஞ்சொலால் மொழிந்த மாலை⋆
கொண்டிவை பாடியாடக்⋆ கூடுவர் நீள் விசும்பே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com